# வினைமுற்று வினையெச்சம் வினையாலணையும் பெயர் தொழிற்பெயர்

(அ) வேர்ச்சொல் - (எ.டு) படி

(ஆ) வினைமுற்று -

(எ.டு) படித்தான் - (படி + த் + த் + ஆன்)

(வினைமுற்றுப் பெற்றதை அறிவிக்கும்)

(இ) வினையெச்சம்:

(எ.டு) படித்து வந்தான் - (படி + த் + த் + உ)

('உ' என்ற விகுதியுடன் எஞ்சி நிற்கும் எச்சம் இரு வினைச் சொல்லைக் கொண்டு முடியும்)

(ஈ) வினையாலணையும் பெயர் - (எ.டு) படித்தோம் - (படி என்ற வினைச் சொல்லால் அணைந்த பெயர்ச்சொல்)

(உ) தொழிற்பெயர் - (எ.டு) படிப்பு – (படி என்ற தொழிலைப் பெயர்ச் சொல்லாக்கி உள்ளது.

தொழிற்பெயர் தல், அல், அம், ஐ, சி, பு – என்ற விகுதிகளுடன் முடியும்)

(எ.டு)

நட - வேர்ச்சொல்
நடந்தான் - வினைமுற்று
நடந்து - வினையெச்சம்
நடந்தோர் - வினையாலணையும் பெயர்
நடத்தல் - தொழிற்பெயர்

**வேர்ச்சொல், பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று வினையாலணையும் பெயர், தொழிற்பெயர், ஆகியவற்றை உருவாக்கல்**

| வேர்ச்சொல் | பெயரெச்சம் | வினையெச்சம் | வினைமுற்று | வினையால் அணையும் | தொழிற்பெயர் |
|---|---|---|---|---|---|
| வா | வந்த | வந்து | வந்தான் | வந்தவன் | வருதல் |
| வை | வைத்த | வைத்து | வைத்தான் | வைத்தவன் | வைத்தல் |
| பார் | பார்த்த | பார்த்து | பார்த்தான் | பார்த்தவன் | பார்த்தல் |
| தின் | தின்ற | தின்று | தின்றான் | தின்றவன் | தின்றல் |
| விடு | விட்ட | விட்டு | விட்டான் | விட்டவன் | விடுதல் |
| நட | நடந்த | நடந்து | நடந்தான் | நடந்தவன் | நடத்தல் |
| கல் | கற்ற | கற்று | கற்றான் | கற்றவன் | கற்றல் |
| அறி | அறிந்த | அறிந்து | அறிந்தான் | அறிந்தவன் | அறிதல் |
| காண் | கண்ட | கண்டு | கண்டார் | கண்டவர் | காணுதல் |
| உண் | உண்ட | உண்டு | உண்டான் | உண்டவர் | உண்டல் |
| வரை | வரைந்த | வரைந்து | வரைந்தான் | வரைந்தவன் | வரைதல் |
| ஓடு | ஓடிய | ஓடி | ஓடினான் | ஓடியவன் | ஓடுதல் |
| தா | தந்த | தந்து | தந்தான் | தந்தவன் | தருதல் |
| சுடு | சுட்ட | சுட்டு | சுட்டான் | சுட்டவன் | சுடுதல் |
| நில் | நின்ற | நின்று | நின்றான் | நின்றவன் | நிற்றல் |
| சிரி | சிரித்த | சிரித்து | சிரித்தான் | சிரித்தவன் | சிரித்தல் |
| தேடு | தேடிய | தேடி | தேடினான் | தேடியவன் | தேடுதல் |
| வீசு | வீசிய | வீசி | வீசினான் | வீசியவன் | வீசுதல் |
| ஒழி | ஒழித்த | ஒழித்து | ஒழித்தான் | ஒழித்தவன் | ஒழித்தல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வெல் | வென்ற | வென்று | வென்றான் | வென்றவன் | வெல்லுதல் |
| கேள் | கேட்ட | கேட்டு | கேட்டார் | கேட்டவர் | கேட்டல் |
| நடி | நடித்த | நடித்து | நடித்தான் | நடித்தவன் | நடித்தல் |
| தோன்று | தோன்றிய | தோன்றி | தோன்றினான் | தோன்றியவன் | தோன்றுதல் |

**WhatsApp Group -ல் சேர – கிளிக் செய்யவும்**

**Facebook Examsdaily Tamil – FB ல் சேர – கிளிக் செய்யவும்**

**Telegram Channel கிளிக் செய்யவும்**